# தேர்தல் பிரச்சார செலவுகள் இலங்கை அரசியலில் ஏற்படுத்தும் தாக்கம்: ஓர் பகுப்பாய்வு

## Impact of Election Campaign Expenses on Sri Lanka's Politics: An Analysis

Halideen Fathima Rifasha

B.A (Hons), M.Phil in Political Science (Reading)
University of Peradeniya, Sri Lanka
rifasha992@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கையில் காலத்துக்குக் காலம் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்கள் இடம்பெறுவதுண்டு. எந்தவொரு தேர்தல் முறைமையாக இருப்பினும் எவ்வகை தேர்தலாக இருப்பினும் தேர்தல் இடம்பெறுவதற்கு சிறிது காலத்திற்கு முன்பு வேட்பாளர்கள் தத்தம் தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதுண்டு. இத்தகைய தேர்தல் பிரச்சாரத்திற்காக கட்சிகளும் வேட்பாளர்களும் பெருந்தொகைப் பணத்தினைச் செலவு செய்வர். இன்றைய நிலையில் அரசியலைத் தீர்மானிப்தில் வாக்காளர்களை விட பணமே செல்வாக்குச் செலுத்துகின்றது. அரசியல் நிதிமயமாக்கல் செயற்பாட்டின் காரணமாக அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தத்தமது அரசியல் இருப்பினை நிலைநாட்ட விளைகின்ற அரசியல் கலாசாரமே காணப்படுகின்றன. அதாவது பிரதேச அபிவிருத்திற்குச் செலவு செய்யும் நிதியினை விட பன்மடங்கு நிதியினை அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தேர்தல் பிரச்சாரத்திற்காகச் செலவு செய்கின்றனர். இலங்கையைப் பொறுத்தமட்டில் 1978 ஆம் ஆண்டிற்கு முன்னர் தேர்தல் செலவீனங்கள் தொடர்பான சட்டங்கள் வலுவாகக் காணப்பட்டன. இருப்பினும் செலவு செய்யும் பிரச்சார நிதி தொடர்பான வரையறைக் கட்டுப்பாடுகள் இரண்டாம் குடியரசு யாப்பில் நீக்கப்பட்டுள்ளது. வரையறையற்ற பிரச்சார செலவின் காரணமாக வேட்பாளர்களுக்கு சமமான போட்டிக்களம் மறுக்கப்பட்டு புதிய அரசியற் பிரமுவர்கள் உள்நுழைவதை மட்டுப்படுத்துகின்றது. அத்தோடு அரச சொத்துக்கள் துஷ்பிரயோகப்படுவதோடு அரசியலில் ஊழல் அதிகரிக்கவும் இவை காரணமாகின்றது. மேலும் மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு தனியார் நிறுவனங்களினது தலையீடுகள் மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. மேலும் நாட்டினுடைய கொள்கை மற்றும் இறைமையினைப் பாதிப்பதாகவும் இவ் வரையறையற்ற தேர்தல் செலவீனங்கள் காணப்படுகின்றன. இத்தகைய தேர்தல் பிரச்சார செலவுகளை வரையறுப்பதன் மூலம் ஜனநாயக அரசியலினை நிலைநாட்ட முடியும்.

**திறவுச் சொற்கள்:** பிரச்சார செலவு, நிதிமயமாக்கல், பிரச்சார நிதி, ஜனநாயகம்

### 1. ஆய்வுப் பின்னணி:

இன்றைய நவீன யுகத்தில் காலத்தின் தேவை கருதி நேரடி ஜனநாயக முறைமை பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமையாக பரிணமித்துள்ளது. பிரதிநிதித்துவ ஜனநாயக உடற்கூற்றில் கட்சிகள் குருதிக் கலன்களுக்கு ஒப்பானவையாகும். அந்தவகையில் ''முழுப்பிரஜைகளினதும் செல்வாக்கின் மூலமான தெரிவு அல்லது பிரஜைகளில் ஒரு பகுதியினர் தங்களில் இருந்து அங்கத்தவர்களைத் தெரிவுசெய்து கொள்வதன் மூலம் அரசாங்க செயற்பாட்டிற்கான அனுமதியினை வெளிப்படுத்தல்'' பிரதிநிதித்துவம் ஆகும் *(Krishnamohan.T, 2013).*

பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல் என்பது ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் ஒரு கட்சிக்கோ அல்லது சுயேட்சைக்கோ வாக்களிப்பதன் மூலம் ஆட்சியாளரைத் தெரிவு செய்கின்ற முறையாகும். அந்தவகையில் இலங்கையில் காலத்துக்குக் காலம் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்கள் இடம்பெறுவதுண்டு. மேலும் எந்தவொரு தேர்தல் முறைமையாக இருப்பினும் எவ்வகை தேர்தலாக இருப்பினும் தேர்தல் இடம்பெறுவதற்கு சிறிது காலத்திற்கு முன்பு வேட்பாளர்கள் தத்தம் தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதுண்டு. இத்தகைய தேர்தல் பிரச்சாரத்திற்காக கட்சிகளும் வேட்பாளர்களும் பெருந்தொகைப் பணத்தினைச் செலவு செய்வர். இத்தேர்தல் பிரச்சாரத்திற்கான செலவுகள் வேட்பாளர்களுக்கு வேட்பாளர் வேறுபட்டும் இருப்பதுண்டு. அந்தவகையில் ''அரசியலின் தாய்ப்பால் பணமாகும்'' என ஐக்கிய அமெரிக்க குடியரசின் பிரசித்தி பெற்ற முன்னாள் அரசியல் தலைவர் ஜேஸ் உன்று குறிப்பிடுகின்றார் *(Gajanayaka.M,2019).* அதாவது அரசியலானது பணத்தினை மையங்கொண்ட ஒன்றே என்பதாகும். அத்தோடு அரசியலும் நிதியும் இரண்டறக் கலந்துள்ளமையினையே வெளிப்படுத்துகின்றது. மேலும் தேர்தல் செலவீனங்கள் வாக்களிப்பின் வெளியீடுகளில் தாக்கம் செலுத்துகின்றன.

## 2. ஆய்வு நோக்கங்கள்:

- அரசியலுக்கும் பணத்திற்குமான தொடர்பினை அறிதல்.
- அரசியலைத் தீர்மானிப்பது வாக்காளர்களா அல்லது பணமா என்பதை கண்டறிதல்.
- தேர்தல் பிரச்சார செலவுகளை வரையறை செய்வதன் மூலம் ஜனநாயக அரசியலினை நிலைநாட்ட முடியுமா என்பதை அறிதல்.
- தேர்தல் பிரச்சார செலவுகளை வரையறுப்பதிலுள்ள சவால்களை கண்டறிதல்.

### 2.1. ஆய்வுப் பிரச்சினையும் ஆய்வு வினாக்களும்:

காலத்திற்கு காலம் சுதந்திரமாகவும் நியாயமாக தேர்தல்கள் இடம்பெறினும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது,

(1) ஆளும் கட்சி பொது நிதிகளை சட்டத்திற்கு முரணான வகையில் தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் அதிகம். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு தேர்தல் ஆணையகத்திற்கு வலுவான சட்டங்கள் இல்லாதுள்ளது அல்லது கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

(2) ஆட்சியாளர்களைத் தீர்மானிப்பவர்களாகச் (Kingmakers) சர்வதேச ரீதியில் சர்வதேச நீரோட்டத்தைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்துபவர்கள் சர்வதேச நிதி நிறுவனங்கள் ஊடாக வழங்கும் உதவியும், தேசிய ரீதியில் ஆட்சியாளர்களைத் தீர்மானிப்பவர்களாகிய தேசிய முதலீட்டாளர்கள் வழங்கும் நிதியுதவியும் ஆட்சியைத் தீர்மானிக்க உதவுகின்றதாக கூறப்படுகின்றது.

அந்தவகையில் தேர்தல் பிரச்சார செலவு என்றால் என்ன?, அரச பொது நிதி தேர்தல் பிரச்சார செலவுகளை வரையறை செய்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றனவா? வரையறையற்ற தேர்தல் பிரச்சார செலவினால் ஏற்படும் விளைவுகள் யாது? தேர்தல் பிரச்சார செலவுகளை ஏன்

வரையறை செய்ய வேண்டும்? எவ்வாறு தேர்தல் பிரச்சார செலவுகளை வரையறுப்பது? தேர்தல் பிரச்சார செலவுகளை வரையறை செய்வதன் மூலம் ஜனநாயக அரசியலினை உருவாக்க முடியுமா?, தேர்தல் பிரச்சார செலவுகளை வரையறுப்பதிலுள்ள சவால்கள் எவை? போன்ற ஆய்வு வினாக்களுக்கு இவ் ஆய்வு விடை தேடுகின்றது.

### 2.2. ஆய்வு முறையியல்:

ஆய்விற்குப் பண்பு ரீதியான தரவுப் பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சிந்தனைகள் நம்பிக்கைகள், வழக்காறுகள், கருத்துக்கள், சொற்கள், பதங்கள், போன்ற மனித செயற்பாடுகளுடனும், இயற்பண்புகளுடனும் தொடர்புடைய விடங்கள் பயன்படுத்தப்பட்டு இவ் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக முதலாம் நிலை தரவுகளான அவதானம் மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளில் இருந்தும் இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிக்கைகள் என்பவற்றில் இருந்து தரவுகள் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு இவ் ஆய்விற்காக இளைஞர்கள், பெண்கள் என்போரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் குழுத் தலைவர் மற்றும் பெண்கள் சங்கத் தலைவி என்பவர்களிடம் நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டன. குறிப்பாக இளைஞர்கள் சார்பாக தேர்தலில் போட்டியிட்ட இளம் தேர்தல் வேட்பாளரிடமும் நேர்காணலின் மூலம் தரவுகள் பெறப்பட்டன.

அத்தோடு குறிப்பான அவதானம் அல்லது புலன்கள் சார்ந்த அனுபவம் ஊடாகவும் இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளில் இருந்து முடிவுகள் பெறப்பட்டுள்ளன. எனவே இவ்வாய்விற்கு பல்வேறு தனிப்பட்ட முடிவுகளில் இருந்து பொது முடிவிற்கு வரும் முகமாக தொகுத்தறி முறை பயன்படுத்தப்பட்டு இவ் ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 3. தேர்தல் பிரச்சார செலவுகள்:

அரசியல் கட்சிக்கோ அல்லது கட்சியினது வேட்பாளர்களுக்கோ முறையாகவோ அல்லது முறையற்ற விதத்திலோ கிடைக்கக் கூடிய நிதி வடிவிலான அல்லது பொருள் வடிவிலான வருமானங்களும் செலவுகளும் அரசியல் நிதிமயமாக்கல் ஆகும். இத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் தேர்தல் காலத்திலோ அல்லது தேர்தல் காலங்கள் அல்லாத நிலைகளிலோ இடம்பெறலாம். அந்தவகையில் அரசியல் நிதிமயமாக்கத்தினைத் தீர்மானிக்கும் காரணிகளில் பிரதான காரணி தேர்தல் பிரச்சார செலவுகள் ஆகும். தேர்தலொன்றில் வெற்றியீட்டும் பொருட்டு அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் பிரச்சார செலவிற்காக பயன்படுத்தும் முறைமைகள் வேறுபட்டிருக்கும். இருப்பினும் அரசியல் கட்சிகளின் அல்லது சுயேட்சைக்குழுக்களின் பொதுவான பிரச்சார செலவுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். அவைகளாவன, போட்டியிடும் தேர்தலுக்காக அச்சிடப்பட்ட, வெளியிடப்பட்ட, காட்சிப்படுத்தப்பட்ட, விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள், கொடிகள், சித்திரங்கள், நிழற்படங்கள் அல்லது ஏனைய பிரச்சார மாதிரிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள், இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகத்திற்காக குறித்த வேட்பாளர், கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் பிரச்சாரத்தின்

பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஏற்ற செலவுகள் மற்றும் ஒளிபரப்பு மற்றும் அச்சு ஊடகத்திற்காக மேற்கொண்ட செலவுகள், இவற்றில் செய்திகள் அல்லது அரசியல் விவாதங்கள் உள்ளடங்காது. மற்றும் குறித்த தேர்தலில் பயன்படுத்துவதற்காக குத்தகை, வாடகை அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் பெற்றுக் கொண்ட ஓர் இடம், வாகனம் அல்லது பொருள் ஒன்றிற்காக மேற்கொண்ட செலவுகள், மற்றும் ஏதேனும் பிரச்சார நடவடிக்கை ஒன்றிற்காக குடும்ப அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனையோருக்காக மேற்கொண்ட செலவுகள் என்பனவாகும். இங்கு குடும்ப அங்கத்தவர்கள் என குறிப்பிடப்படுபவர்கள் யாரெனில், வேட்பாளரின் தாய், தந்தை, வாழ்க்கைத் துணை, விவாகமாகாத பிள்ளைகள், மற்றும் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள உரிய குடியிருப்பின் நபர்களைக் குறிக்கும்.

### 3.1. தேர்தல் பிரச்சார செலவும் அனுபவங்களும்

இந்தியாவில் 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது போட்டியிட்ட வேட்பாளர்கள் பொதுவாக அரசியல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவு செய்த நிதியின் அளவானது 5 பில்லியன் அமெரிக்க டொலராகும். ஐக்கிய அமெரிக்கா பொதுத் தேர்தலுக்காக செலவு செய்த நிதி 7 பில்லியன் அமெரிக்க டொலராகும் *(Gajanayaka.M, 2019).* இலங்கையில் இடம்பெற்ற தேர்தல்களில் வேட்பாளர்கள் அல்லது அரசியற்கட்சிகள் செலவு செய்த பிரச்சார நிதியின் அளவு தொடர்பான மதிப்பீடு இதுவரை முறையாக கண்டறியப்படவில்லை. இருப்பினும் A எனும் வேட்பாளரிடம் இருந்து தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV-Centre for Monitoring Election Violence) கிடைக்கப் பெற்ற தகவலின்படி அவ் குறித்த வேட்பாளர் 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தல் ஒன்றில் தாம் தேர்தல் பிரச்சாரத்திற்காக செலவு செய்த நிதியின் அளவு 800 இலட்சம் என தெரிவித்து இருந்தார் *(Gajanayaka.M, 2019).* இவ் நிதியின் அளவினை நோக்குகின்ற போது, இலங்கை நாட்டின் பெரும்பாலான பிரதேச சபைகள் தம் பிரதேச அதிகார எல்லைக்குட்பட்ட மக்களுக்காக வருடம் ஒன்றிற்காக செலவு செய்யும் வருடாந்த நிதியின் அளவு 80 இலட்சம் ரூபாயினைவிட குறைவானதாகும் *(Gajanayaka.M, 2019).* 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதிவரையிலான இரண்டு நாட்களுக்குள் பொதுஜன பெரமுன வேட்பாளர் 1.31 பில்லியன் ரூபாய் தேர்தல் செலவும், புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் மொத்த தேர்தல் செலவாக 1.42 ரூபாய் தேர்தல் செலவும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் மொத்த தேர்தல் செலவாக 160 மில்லியன் ரூபாய் செலவு செய்திருந்தனர் *(Kaalaikkathir, 2019).* ஆகவே ஒரு வேட்பாளர் தாம் தேர்தல் பிரச்சாரத்திற்காக இந்தளவு தொகையினை எங்கிருந்து பெருகின்றனர்? என்ற கேள்வி எழும்புகின்றது.

### 3.2. தேர்தல் பிரச்சார செலவுச் சட்ட ஒழுங்கு

இலங்கையைப் பொருத்தமட்டில் தேர்தல் பிரச்சார செலவுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டமொன்று இன்மை பாரிய குறைபாடாகும். ஆயினும் 1977 ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களின்போது வேட்பாளர்களது செலவுகளை உரிய மாவட்டத்தின் தேர்தல் அலுவலருக்கோ அல்லது தேர்தல் ஆணையாளருக்கோ மிகச் சரியாக ஒப்படைக்கப்பட

வேண்டும் என்பது அவசியமான நிபந்தணையாக இருந்தது. 1964 ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் மூலம் இதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன *(ROAR, 2019).* குறிப்பாக 1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெலிமட தொகுதியில் வெற்றியீட்டிய வேட்பாளர் ஒருவர் தமது தேர்தல் செலவுகளை உரிய காலப்பகுதிக்குள் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிப்பதற்கான உரிய நடவடிக்கையினை எடுக்காததன் காரணமாக அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியினைக் கூட இழக்கும் நிலைக்கு அப்போதைய தேர்தல் சட்டங்கள் வலுவானதாக இருந்தன. மேலும் கொள்கைப் பிரகடனத்தை தமிழில் மொழிபெயர்ப்பதற்காக செலவு செய்யப்பட்ட 25 ரூபாவினை தமது செலவு அறிக்கையில் உள்ளடக்கவில்லை என்ற குற்றத்திற்காக கண்டி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் தமது உறுப்புரிமையை இழக்க நேரிட்டது *(CMEV, 2019).*

2005 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டு (Article no 7.3) ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கெதிரான உடன்பாட்டிற்கு (UNCAC- United Nations Convention Against Corruption) இலங்கையே முதலில் அனுமதியினை வழங்கியது *(Democracy Reporting International, 2020).* "இலங்கையும் உறுப்பு நாடாக உள்ள ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் உடன்பாடு மற்றும் ஊழலை ஒழிப்பது தொடர்பான ஏனைய சில சர்வதேச உடன்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்". தேர்தல் பிரச்சார செலவுகளை ஒழுங்குபடுத்தும் முறைமைக்கு உட்படுத்தும் நோக்கில் உலக நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன *(ROAR, 2019).* வேட்பாளர்களது தேர்தல் பிரச்சார செலவுகளை அரச நிதியம் ஒன்றினூடாக பெற்றுக் கொடுப்பதற்கு ஜேர்மன் நடவடிக்கை எடுத்திருப்பதுடன் பிரித்தானியாவில் அரசியற்கட்சிகளுக்குக் கிடைக்கும் நன்கொடைகள் மற்றும் அவை எவ்வாறு செலவு செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பில் அரசியல் கட்சிகள் மக்களுக்கு தெரியப்படுத்தும் முறை காணப்படுகின்றது. இந்தியாவும் கூட தேர்தலின் போது கிடைக்கின்ற வாக்குகளுக்கு அமைவாக அரசின் மூலம் செலவுகளை வழங்கும் முறைமையொன்றினையும் பின்பற்றுகின்றது. ஸ்கெண்டிநேவிய நாடுகள் பலவற்றில் அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு அரசின் நிதிகளைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது *(Gajanayaka.M, 2019).* இதன்படி அரச நிதி வழங்கல் என்பது தேர்தல் செலவுகளை வரையறுப்பதில் தீர்மானமிக்க காரணியாக அமைகின்றது எனலாம்.

## 4. ஆய்வுக் கண்டுபிடிப்புக்கள்

இலங்கையில் தேர்தல் பிரச்சாரத்திற்கான செலவுகள் வரையறை செய்யப்படாதவிடத்து ஒருவருக்கு ஒரு வாக்கு என்கின்ற பொது உடன்பாட்டுக் கோட்பாடு மீறப்படுவதோடு பின்வரும் ஜனநாயகத்திற்கு முரணான பாதகமான விளைவுகள் அரசியலில் இடம்பெறும். அவை, புதிய அரசியல் வேட்பாளர்கள் மற்றும் இளைஞர்களின் உள்ளீர்ப்பு மட்டுப்படுத்தப்படும் *(IRI,NDI, 2019).* அதாவது கட்சிகள் அல்லது சுயேட்சை வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றியீட்டும்

பொருட்டு அதிக செலவிலான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் ஏனைய சமபல போட்டியாளர்களும் அதேபோல் தேர்தல் பிரச்சார செலவுகளை பன்முகப்படுத்தவே விரும்புகின்றனர். அதாவது "இளைஞர்கள் அரசியலில் உள்நுழைவதற்கு தேர்தல் பிரச்சார செலவு தடையாக உள்ளதோடு ஏனைய வேட்பாளர்களைப் போல் புதிய அரசியல் வேட்பாளர்கள் தங்களது பிரச்சாரங்களை அதிகளவில் மேற்கொள்ள முடியவில்லை. காரணம் தேர்தல் பிரச்சாரத்திற்கான துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்ககூட போதிய நிதி வசதி சாதாரண இளைஞர்களிடம் இருப்பதில்லை" (*Nowsad.M.S, 2020).* மற்றும் "தேர்தல் பிரச்சார செலவுகளான விளம்பர பலகை தயாரித்தல், துண்டுப்பிரசுர விநியோகம், ஒலிபெருக்கி வசதிகள் போன்ற தேர்தல் செலவுகளுக்கான நிதி வசதி இன்மையே இளைஞர்கள் அரசியலில் போட்டி போடுவதற்கான தடையாக உள்ளது" (*Fahir.L.M, 2020*). எனவே ஜனநாயகமிக்க போட்டித்தன்மையுடைய சமமான போட்டிக்களம் மறுக்கப்படவும் இவ் வரையறையற்ற தேர்தல் பிரச்சார செலவு காரணமாகின்றது *(Kaalaikkathir, 2019).*

மேலும் அரச சொத்துக்களின் துஸ்பிரயோகம் அதிகரிக்க இவை காரணமாகின்றது. அதாவது வேட்பாளர்களின் வரையறையற்ற தேர்தல் பிரச்சார செலவின் காரணமாக அரச சொத்துக்கள் பிரச்சாரத்திற்கா பயன்படுத்தப்படுவதோடு தேர்தல் பிரச்சார செலவுகள் தொடர்பான பொறுப்புக் கூறவேண்டிய நிலை இல்லாத காரணத்தினாலும் அரச சொத்துக்கள் ஜனநாயகத்திற்கு முரணான வகையில் துஸ்பிரயோகத்திற்குள்ளாக்கப்படுகின்றன *(ROAR, 2019).*

வரையறையற்ற தேர்தல் செலவீனங்களால் தேர்தல் காலங்களில் வாக்குகள் பணம் கொடுத்து வாங்கும் கலாசாரம் உருவாகியுள்ளன *(Gajanayaka.M, 2019).* அதாவது தேர்தல் பிரச்சார செலவுகளுக்கான கட்டுப்பாடுகள் அல்லது வரையறைகள் விதிக்கப்படுகின்ற போது வரையறுக்கப்பட்ட நிதித் தொகைகளை மாத்திரமே செலவு செய்ய முடியும். இதனால் தேர்தலில் வாக்குகள் பணம் கொடுத்து வாங்க முடியாத நிலை ஏற்படும். ஆனால் தேர்தல் பிரச்சார நிதிக்கான எவ்வித கட்டுப்பாடுகளோ தடைகளோ இல்லாத காரணத்தினாலேயே எங்கு இருந்தும் நிதியினைப் பெற்றுக்கொள்ள முடியும், எப்படி வேண்டும் என்றாலும் நிதியினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனால் சட்டவிரோதமான நிதிகளும் கூட தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது *(Kaalaikkathir, 2019).* மேலும் வேட்பாளர்கள் அதிக பணங்களை தேர்தலுக்கு செலவழிப்பதனால் தேர்தலில் வெற்றியீட்டியதன் பின் செலவு செய்த பணங்களை பன்மடங்காகத் திருப்பிப் பெறும் நோக்குடன் மக்களின் நலன்களை புறக்கணித்து அரசியல் இலாப நோக்கத்திற்காகச் செயற்பட இவ் வரையறையற்ற தேர்தல் செலவுகள் காரணமாகின்றன *(ROAR, 2019).*

அரசியல் செயற்பாடுகளில் தனியார் மற்றும் சர்வதேச தலையீடுகள் அதிகரிக்க காரணமாகின்றன. அதாவது "வேட்பாளர்கள் அரசியலில் வெற்றியீட்டும் பொருட்டு அதிகளவான தேர்தல் செலவீனங்களை போட்டி போட்டுக் கொண்டு செவிடுகின்றனர். இதற்காக "சிலர் சொந்த நிதிகளில் இருந்தும் பலர் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களில் இருந்தும் மறைமுகமாக நிதி ஆதரவுகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இத்தகைய முறையற்ற நிதி கொடுக்கல் வாங்கல்கள் அரசியல் கொள்கைகளில் எதிர்மறை பாதிப்பை உண்டு பண்ணுகிறது".

குறிப்பாக ‘‘இறுதியாக இடம்பெற்ற 2020 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் பல்வேறு வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் தேர்தலுக்கு நிதிப் பங்களிப்பினை வழங்கி இருந்தன’’ (*Fahir.L.M, 2020*). எனவே சர்வதேச அளவில் சட்டவிரோத அமைப்புக்கள் அல்லது சட்டவிரோதமாக பிற நாடுகளில் இருந்து நிதி உதவிகளைப் பெறுவதால் தேர்தலில் வெற்றியீட்டியதன் பின் குறித்த நிதி உதவி செய்த பிற நாடுகளின் அழுத்தங்கள் மற்றும் தலையீடுகள் என்பன இலங்கை நாட்டினுடைய கொள்கைகள் மற்றும் இறைமையினைப் பாதிப்பதாக அமையும்.

**பிரச்சார செலவுகளை வரையறை செய்யும் வழிமுறைகளாக:** அரசியல் கட்சிகளுக்கு பொது நிதிவழங்கல் செயற்பாட்டினூடாக அரசியல் பிரச்சார செலவுகளை வரையறை செய்ய முடியும். அதாவது பணம் மற்றும் பொருட்களுக்காக அரசியல் கட்சிகள் தனியார் நிதி வழங்குனர்களில் தங்கியிருக்கும் நிலையினைக் பொதுநிதி வழங்களினூடாக குறைக்கலாம். இவை நிதிப் பங்களிப்பின் வெளிப்படை மற்றும் பொறுப்புக்கூறல் தன்மையினையும் ஏற்படுத்தும். உச்சசெலவு, அரசியலில் குற்றவியலற்ற தன்மை, உள்ளக ஜனநாயகம், அரசியல் கட்சிகளின் நிதி வெளிப்படைத் தன்மை, ஊழலுக்கு எதிரான சட்டங்களை அனுசரித்தல் போன்ற வரையறைகள் பொதுநிதி வழங்களுடன் இணைந்து அறிமுகப்படுத்தும் போது அவை வினைத்திறன் மிக்கதாக அமையும் *(ECI, 2015).*

தேர்தலில் ஜனநாயகத்தினைப் பேணும் முகமாக நடைமுறையில் ஆட்சியாளரைத் தீர்மானிப்பவர்களாக விளங்கும் சர்வதேச மற்றும் உள்நாட்டு தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை வரையறுத்தல். அதாவது பெயர்குறிப்பிடாத நிதியாளர்களின் நிதி மற்றும் பொருள் வழங்கல்களை தடைசெய்தல் அல்லது கடுமையான வரையறைக்கு உட்படுத்துதல் வேண்டும் *(ROAR, 2019).* இவை அரசியல் செயல்முறையில் செல்வாக்குச் செலுத்தாததும் அபாயமற்றதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுமான தொகையினை மட்டுப்படுத்துதல். குறிப்பாக வெளிநாட்டு பிரஜைகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களில் இருந்து நன்கொடைகளை அனுமதிக்காதுவிடல். மற்றும் ‘‘அரசு முறையற்ற நிதி கொடுக்கல் வாங்கல்களை மேற்பார்வை செய்தல்’’ (*Fahir.L.M, 2020*). அத்துடன் நன்கொடை வழங்குனர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையிலான ‘‘ஒன்று கொடுத்து வேறு ஒன்றைப் பெறுதல்’’ சாத்தியப்பாட்டில் கடுமையான விழிப்புணர்வுடன் செயற்படல். இவற்றின் மூலம் சர்வதேச நிறுவனங்களின் அழுத்தங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் கட்டுப்பாட்டினை தடுக்கமுடியும். அத்துடன் ஊடகவரையறைகளை மேற்கொள்வதன் மூலம் ஜனநாயகத்தினை நிலைநாட்ட முடியும். அதாவது தேர்தல் காலங்களில் செயற்படும் ஒலி, ஒளி, அச்சு மற்றும் சமூக ஊடகங்களது பிரச்சார செலவுகள் தொடர்பாக பொதுவான ஒழுக்கக் கோட்பாடு அல்லது கோவை ஒன்றினை உருவாக்குவதன் மூலம் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமான பிரச்சார வாய்ப்புக்களை வழங்கமுடியும்.

தேர்தல் பிரச்சார செலவு பற்றி பொதுமக்களுக்குப் பொறுப்புக் கூறுதல் மற்றும் வெளிப்படைத் தன்மையினை ஏற்படுத்துவதன் மூலம் ஜனநாயகத்தினை நிலைநாட்ட முடியும் *(ECI, 2015).* அதாவது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தமது நிதி நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகின்ற போது அவை ஊழலில் இருந்து வெற்றி கொள்ள

உதவுகின்றது (*Jedly.A, 2018)* இங்கு வெளிப்படைத் தன்மை என்பது குறித்த அரசியல் கட்சியோ அல்லது வேட்பாளர்களோ தமது அரசியல் செலவீனங்களை விரைவாகவும் போதியளவு விபரங்களினூடாகவும் பொதுமக்கள் விளங்கிக் கொள்ளக் கூடியவகையில் தெரியப்படுத்துதல் ஆகும். பிரச்சார செலவு பற்றிய தரவுகளை பொதுமக்களுக்கு கண்காணிப்பு நிறுவன வலைத்தளங்கள் (website) மூலம் அறியக்கூடிய வகையில் வடிவமைத்தல். இதன் மூலம் அரசுசாரா செயற்பாட்டாளர்களினுடைய தவறுகளை கண்டறிய முடிவதோடு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். அத்துடன் இவற்றின் மூலம் வாக்காளர்களின் எதிர்பார்ப்புக்களில் மாற்றத்தினை ஏற்படுத்த முடிவதோடு அரசியல் பிரிவினரது நடத்தையில் மாற்றத்தினையும் ஏற்படுத்த முடியும்.

கட்சியோ அல்லது வேட்பாளர்களோ தமது தேர்தல் செலவீனங்கள் தொடர்பான அறிக்கையிடலுக்கான தேவையினை அதிகரித்தல் மூலம் ஜனநாயகத்தினை நிலைநாட்ட முடியும். அதாவது அரசியல் கட்சி மற்றும் வேட்பாளர்களது பங்களிப்புக்கள், செலவுகள் மற்றும் பொருள் வடிவிலோ அல்லது சேவை வடிவிலோ மேற்கொள்ளப்பட்ட நிதிச் செயற்பாடுகள் அறிக்கைகளாக்கப்படல். இத்தகைய கட்சிகளினதும் சுயேட்சை வேட்பாளர்களினதும் பிரச்சார செலவு அறிக்கைகள் நியாயமான மற்றும் குறித்த நேர அட்டவணைக்குள் முறையான அதிகார பீடத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் *(ECI, 2015).* மேலும் பிரச்சார செலவுகளை சீர்செய்வதனூடாக தேர்தலில் பெண்களின் பங்களிப்பினை ஊக்கப்படுத்தல் *(IRI,NDI, 2019).* மேலும் "பெண்கள் அரசியலில் போட்டிபோடுவதில் பிரச்சார நிதி சவாலாக உள்ளது" (*Anasty.J, 2020*). மற்றும் "பெண்கள் மற்றும் இளைஞர்களை தேர்தலில் உள்ளீர்ப்புச் செய்வதில் தேர்தல் செலவுகள் தடையாக உள்ளது" (*Nowsad.M.S, 2020).* எனவே தேர்தல் செலவீனங்களை வரையறை செய்வதனூடாக அதிகளவான இளைஞர்களையும் பெண்களையும் அரசியலில் போட்டியிடுவதற்கான களத்தினை உருவாக்க முடியும்.

அரச வளங்களின் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவதனூடாக தேர்தல் செலவீனங்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். அதாவது அரச உரிமை அல்லது அரச பகுதியுரிமை நிறுவனங்களின் நன்கொடைகளுக்கு தடைவிதிப்பதனூடாக அரச வளங்களின் மறைமுக துஷ்பிரயோகத்தினைத் தடுக்க முடியும் *(ECI, 2015).* மேலும் அரச உடமை ஊடக வளங்களின் தேர்தல் பிரச்சார ஒளிபரப்புக்கள் பக்கச்சார்பற்ற சமநிலை வழுவாத முறையில் மேற்கொள்ளுதல். அரச ஊழியர்கள் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் நிதிப்பங்களிப்புச் செய்வதை அல்லது வேறு செயற்பாடுகள் தொடர்பில் நிர்ப்பந்திக்கக் கூடாது. மற்றும் தேர்தல் காலங்களில் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் அரச வளங்களை உபயோகித்தல் தொடர்பான பொருத்தமான மற்றும் சுயாதீனமான குழுவால் கண்காணிப்புச் செயற்பாட்டினை மேற்கொள்வதனூடாகவும் அரசவளங்களின் துஷ்பிரயோகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதனூடாக முறையற்ற தேர்தல் செலவீனங்களைக் கட்டுப்படுத்த முடியும்.

## 5. முடிவுரை

அரசியல் நிதிமயமாக்கல் செயற்பாட்டின் காரணமாக அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தத்தமது அரசியல் இருப்பினை நிலைநாட்டவிளைகின்ற அரசியல் கலாசாரமே மேலோங்கியுள்ளது. அதாவது பிரதேச அபிவிருத்திற்கு செலவு செய்யும் நிதியினை விட பன்மடங்கு நிதியினை அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தேர்தல் பிரச்சாரத்திற்காகச் செலவு செய்கின்றனர். இலங்கையைப் பொருத்தமட்டில் 1977 ஆம் அண்டிற்கு முன்னர் குறிப்பாக 1964 ஆம் ஆண்டு மற்றும் 1952 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தேர்தல் செலவீனங்கள் தொடர்பான சட்டங்கள் வலுவாகக் காணப்பட்டன. இருப்பினும் இவ்வாறு செலவு செய்யும் பிரச்சார நிதி தொடர்பான வரையறைக் கட்டுப்பாடுகள் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில் நீக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் இலங்கையானது 2003 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான உடன்பாட்டிற்கு முதலில் அனுமதியினை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது இலங்கையானது தேர்தல் பிரச்சார செலவுகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இருப்பினும் வரையறையற்ற பிரச்சார செலவின் காரணமாக வேட்பாளர்களுக்கு சமமான போட்டிக்களம் மறுக்கப்பட்டு புதிய அரசியற் பிரமுவர்கள் உள்நுழைவதை மட்டுப்படுகின்றது. அத்தோடு அரச சொத்துக்கள் துஷ்பிரயோகப்படுவதோடு அரசியலில் ஊழல் அதிகரிக்கவும் இவை காரணமாகின்றது. மேலும் மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு தனியார் நிறுவனங்களினது தலையீடுகள் மற்றும் சர்வதேசத்தினுடைய அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுவதோடு நாட்டினுடைய கொள்கை மற்றும் இறைமையினைப் பாதிப்பதாகவும் இவ் வரையறையற்ற தேர்தல் செலவீனங்கள் உள்ளன. இத்தகைய ஜனநாயகத்திற்கு முரணான விளைவுகளைக் கட்டுப்படுத்தும் முகமாக தேர்தல் பிரச்சார செலவுகளை வரையறுப்பதன் மூலம் நிலைநாட்ட முடியும். அதாவது அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சார செலவுகள் தொடர்பாக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறுவதன் மூலம் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் செலவிற்கான பொது நிதியினை வழங்குவதன் மூலம் மேலும் தேர்தல் பிரச்சார செலவு தொடர்பாக முறையான அறிக்கையிடல் செயற்பாட்டின் மூலம், தனியாரினது பங்களிப்பினைக் வரையறுப்பதன் மூலமும் மற்றும் வெளிநாட்டு உதவிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் மற்றும் அரச வளங்களின் துஷ்பிரயோகத்தினைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தேர்தல் செலவுகளை வரையறைக்குட்படுத்த முடியும். எவ்வாறு இருப்பினும் இத்தகைய வரையறைகளை நடைமுறைப்படுத்துகின்ற போது பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. குறிப்பாக எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது வேட்பாளரோ தாம் தேர்தலுக்காக பயன்படுத்தும் நிதி தொடர்பில் பூரண 100 வீத வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவர் என்பது சாத்தியப்பாடற்ற விடயமாகவே காணப்படுகின்றது. அத்தோடு தேர்தல் வெற்றிக்காக கட்சிகளும் வேட்பாளர்களும் பெரிதும் தனியார் துறையினரிடமும் பெருமளவு வெளிநாடுகளிலுமே நிதி உதவியினைப் பெற்றுக் கொள்கின்ற அரசியல் கலாசாரமே மேலோங்கியுள்ளது. இந்நிலையில் இத்தகைய மறைமுக நிதிக் கொடுக்கல் வாங்கல்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது மற்றுமொரு சவாலே ஆகும். மேலும் இன்றைய நிலையில் அரசியலில் புதிய அரசியல் வேட்பாளர்கள் மற்றும் பெண்களுக்கான வரவேற்பு என்பது சாத்தியப்பாடு குறைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. காரணம் அரசியலில் பணபலமே பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதாவது பணபலமுள்ள உயர்குழாம் அரசியலே நிலவுகின்றது. எனவேதான் ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற போது மூன்றாம் மண்டல

நாடுகளுக்கே உரிய பண்பான பொது நிதி மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதிநிறுவனங்களின் செயற்பாடு தேர்தல் பிரச்சார செலவில் செல்வாக்குச் செலுத்தி ஆட்சியாளரைத் தீர்மானிக்கும் கரங்களாக செயற்படுகின்றன. இத்தகைய தேர்தல் செலவுகளை வரையறை செய்து ஓர் கட்டுப்பாட்டிற்குள் வருவதற்கு இலங்கையானது மேற்கத்தேய நாடுகளைப் போல் யாப்பு ரீதியாக இறுக்கமான தேர்தல் சட்டங்களும் தேர்தல் திணைக்களங்களுக்கு உயர்வான அதிகாரங்களும் வழங்கப்படுகின்ற போதே தேர்தல் பிரச்சார செலவுகளை வரையறைக்கு உட்படுத்த முடியும் எனலாம்.

**உசாத்துணைகள்:**


*Biker.C, (2020),* ***US Campaign finance, The expensive road to the White House, 2020,*** *Available at:* https://www.dw.com/en/us-election-campaign-financing-trump-biden/a-55414853

*CMEV, (2019),* ***Campaign finance reforms essential****, available on:* http://www.campaignfinance.lk/wp-content/uploads/2019/05/ceylon-today-campaign-finance-reforms-essential-e28093-cmev.pdf

*Democracy Reporting International, (2020),****Compaingn Finance in Sri Lanka Recommendations for Effective implementation,*** *Available at:* https://democracy-reporting.org/wp-content/uploads/2020/06/BP-108-Sri-Lanka-Campaign-Finance_FINAL.pdf

*ECI,(2015),* ***புது டில்லி- தென்னாசியாவின் அரசியல் நிதி ஒழுங்கு விதி****, அறிக்கை*

*Fonseka.P,(2020), Funding Election:* ***Whose money is it,*** *Availabe at:* http://www.dailymirror.lk/recomended-news/Funding-Election%3A-Whose-money-is-it-/277-192871

*Gajanayaka.M, (2019),* ***இலங்கை தேர்தல் பிரச்சார செலவுகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் தேர்தல் செயற்பாடுகள்,*** *Available on:* https://cmev.files.wordpress.com/2017/07/cf_tamil-version.pdf , http://www.campaignfinance.lk/page/2/

*IRI,NDI, (2019),* ***இலங்கையின் 2019 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரான IRI மற்றும் NDI அமைப்புக்களின் இணைந்த தேர்தல் தொடர்பிலான மதிப்பீடு,*** *Available on:* https://www.iri.org/sites/default/files/wysiwyg/peam_statement_-_sri_lanka_october_2019_-tamil.pdf

*Jedli.A, (2018),* ***தேர்தல் நன்கொடை பத்திரம் ஏன் அவசியமானவை,*** *Available on:* https://pib.gov.in/PressReleaseIframePage.aspx?PRID=1516063

*Kaalaikkathir,(2019.11.9),* ***தேர்தல் செலவுகள்: ஒரு கண்காணிப்பு***

*Kaalaikathir ,(2019.11.14),* ***கடந்த இரண்டுநாட்களில் மட்டும் பிரச்சாரத்திற்கு ரூ.131 கோடி செலவு***

*Krishnamohan.T, (2013),* ***பிரதிநிதித்துவம்,*** *Available at:* https://www.politicalmanac.com/books/99-blog/subject/dynamics-of-political-science/69-2013-09-03-15-05-50

*Oman.M,* ***அரசியல் நிதிக்கட்டுப்பட்டை மேற்கொள்ளல் தொடர்பான அறிமுகம்,*** *International Foundation for Election Systems*

*ROAR, (2019),* ***பெரும் பணமும் இலங்கையின் அரசியலும்,****Available on:* https://roar.media/tamil/main/trending/big-money-and-politics-exposing-the-hidden-hands-behind-campaign-financing-tamil/


***நேர்காணல்:***

*Anasty.J,(2020),* ***பெண்கள் சங்கம்,*** *தலைவி, மட்டக்களப்பு*

*Fahir.L.M,(2020),* ***Eastern Youth Club****, தலைவரும் இணைப்பாளரும், மட்டக்களப்பு*

*Nowsad.M.S,(2020),* ***2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் சிறிலங்கா சுதந்திர கட்சி சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்***